**வாக்குமூலம்**
**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி**
**வழக்கு எண்.CC 189/2017**
**வழக்கு சாட்சி. அ.சா.2**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | கௌசல்யா | **ஜாதி:** | |
| **தந்தை பெயர்:** | க/பெ.சுரேஷ் | **தொழில்:** | |
| **கிராமம்:** | | **சமயம்:** | |
| **தாலுகா:** | | **வயது :** | 28/2024 |

**22.02.2024**
**எதிரிகள் ஆஜர்.**
சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

குறுக்கு விசாரணை

1) எனது சொந்த ஊர் வடுகாடு என்றால், சரிதான். திருமணம் செய்து கொடுத்தது பஞ்சாத்தி ஆலங்குடி என்றால், சரிதான். என்னை திருமணம் செய்து கொடுத்தது உறவினரா என்றால், அன்னியம். எதிரிகள் என்ன உறவுமுறை என்றால், எனது அம்மாவின் தம்பி மற்றும் அவரது மகன்கள். எப்போது எனக்கு திருமணம் நடைபெற்றது என்றால், 2014. அனைவரும் திருமணத்திற்கு வந்தார்களா என்றால், செந்தில்குமார் மட்டும் திருமணத்திற்கு வந்தார். மற்றவர்கள் வரவில்லை. எதிரி செந்தில்குமார் எனக்கு என்ன உறவுமுறை என்றால், தாய்மாமன். எனது அம்மாவிற்கு எத்தனை குழந்தைகள் என்றால் நான் மட்டும்தான். எனது கணவர் சுரேஷ் அ.சா.-1 திருமணத்திற்கு முன்பும் பின்பும் சென்னையில்தான் இருந்துவந்தார் என்றால், ஆமாம். திருமணம் ஆன நாளில் இருந்து நான் எனது அம்மா வீட்டில்தான் இருந்து வந்தேன் என்றால், ஆமாம்.

2) வீட்டோடு மாப்பிள்ளையாக வருவதற்கு எனது கணவர் ஒப்புக்கொண்டதால்தான் திருமணம் செய்துகொண்டேன் என்றால், ஆமாம். எனது கணவர் எனது தாயார், எனது தாயாரின் தாயார் அளித்த பணத்தினை திரும்ப பெறவேண்டி சென்றபோதுதான் செந்தில்குமார் அசிங்கமாக பேசியதாக போலிஸ் விசாரணையில் கூறியுள்ளார் என்றால், சரியல்ல. நானும் போலிஸ் விசாரணையில் பணம் கொடுக்கல் வாங்கல் தொடர்பாகத்தான் பிரட்சனை ஏற்பட்டதாக கூறியுள்ளேன் என்றால், சரியல்ல. நான் பணம் கொடுக்கல் வாங்கல் என போலிஸ் விசாரணையில் கூறவில்லை என்றால், ஆமாம். சொத்து பிரட்சனைக்காக, பணம் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக நாங்கள் சென்றோம் என்றால், இல்லை. திருமணத்திற்கு பின்பு நானும் எனது கணவரும் எதிரிகளிடம் சொத்து கேட்டு பிரட்சனை செய்தோம் என்றால், இல்லை.

3) திருமணத்திற்கு எனது அம்மாவும் எதிரிகளும் இணக்கமாகத்தான் இருந்தார்கள் என்றாலும் எனது கணவர் வந்த பின்புதான் சொத்து கேட்டு பிரட்சனை ஏற்பட்டது என்றால், சரியல்ல. எனது அம்மாவின் அம்மா உயிருடன் உள்ளாரா என்றால், உள்ளார். எனது அம்மாவின் அம்மாவுடன் நான் பேசுவதில்லை என்றால், ஆமாம். நாங்கள் வாங்கிய பணத்தினை கொடுக்கவில்லை என்றால், பணமே நாங்கள் வாங்கவில்லை. எனது கணவர் சென்னையில் டிரைவராக வேலை செய்து வருகிறார் என்றாலும் பிரட்சனை செய்வதற்காக வந்தபோது வாய் சண்டைதான் நடைபெற்றது என்றால், சரியல்ல. எதிரிகள் அறந்தாங்கியில் பல காலமாக டைலர் வேலை செய்து வருகிறார்கள் என்றால், ஆமாம். எதிரிகள் அறந்தாங்கியில் அனைவராலும் தெரியக்கூடிய நபர்கள் என்றால், ஆமாம். எதிரிகள் மீது பொறாமை கொண்டு பொய்யாக புகாரானது அளித்துள்ளேன் என்றால், சரியல்ல. நாங்கள்தான் சொத்துகேட்டு அவர்கள் வீட்டிற்கு சென்று பிரட்சனை செய்தோம் என்றால், சரியல்ல. எதிரிகள் அடித்ததாக பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றால், சரியல்ல.

4) சம்பவம் உண்மையாக நடந்திருந்தால் எனது அம்மாவின் அம்மாவினை சாட்சியாக சேர்த்திருப்போம் என்றாலும் உண்மையில்லை என்பதால்தான் அவரை சாட்சியாக சேர்க்கவில்லை என்றால், சரியல்ல. எதிரிகளின் தாயாரினை நானும் எனது கணவரும் அடித்ததினை எதிரிகள் கேட்டனர் என்பதால் பொய்யாக இவ்வழக்கானது கொடுத்துள்ளோம் என்றால், சரியல்ல. நாங்கள் அடித்ததில் அவர் மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தார் என்றால், அவர் பொய்யாக சேர்ந்தார். ஊர் பஞ்சாயத்தானது பேசப்பட்டு அனைவரும் உறவினர்கள் என்பதால் சொத்தினை பொறுத்து

பிற்காலத்தில் முடிவு செய்துகொள்ளலாம் என முடிவு செய்த பின்பு நான் இப்புகாரினை பொய்யாக அளித்தேன் என்றால், சரியல்ல. சமாதானமாக பேசி முடிவுசெய்து இருந்த நிலையில் நான்தான் இவ்வழக்கினை பிரட்சனை செய்வதற்காக பதிவு செய்தேன் என்றால், சரியல்ல.

5) உண்மையான சம்பவம் நடந்திருந்தால் போலிசார் உடனடியாக புகாரினை பதிவு செய்திருப்பார்கள் என்றாலும் பொய்புகார் என்பதால்தான் புகாரானது காலதாமதமாக பதிவு செய்யப்பட்டது என்றால், சரியல்ல. நான் எனது கணவர் சண்டையின் போது வீட்டின் உள்ளேதான் இருந்தேன் என்றாலும் சம்பவத்தை நான் நேரில் பார்க்காமல் எனது கணவர் கூறியதை வைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. சம்பவத்தில் காயம் ஏதும் ஏற்பபடவில்லை வேறு எங்கையோ ஏற்பட்டதினை சம்பவத்தில் ஏற்பட்டதாக பொய்யாக புகார் அளித்துள்ளோம் என்றால், சரியல்ல.

மறுவிசாரணை
இல்லை

**வாக்குமூலம்**
**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி**
**வழக்கு எண்.CC 189/2017**
**வழக்கு சாட்சி. அ.சா.3**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | தமிழரசி | **ஜாதி:** | |
| **தந்தை பெயர்:** | க/பெ.பன்னீர்செல்வம் | **தொழில்:** | |
| **கிராமம்:** | | **சமயம்:** | |
| **தாலுகா:** | | **வயது :** | 57/2024 |

**22.02.2024**
**எதிரிகள் ஆஜர்.**
சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

குறுக்கு விசாரணை

1) எனது சொந்த ஊர் வடுகாடு. என்னை எங்கு கட்டி கொடுத்தார்கள் என்றால், வேதியன்குடி. திருமணமான பத்து மாதத்தில் எனது அம்மா வீட்டிற்கு திரும்பி வந்துவிட்டேன். எனது கணவர் பெயர் பன்னீர்செல்வம். நான் அவருக்கு இரண்டாவது மனைவி என்றால், ஆமாம். அவருக்கு முதல் மனைவி உயிருடன் இருந்தபோதுதான் நான் இரண்டாவது திருமணம் தெரிந்தே செய்துகொண்டேன் என்றால், ஆமாம். சட்டப்படி தவறு என்று தெரிந்துதான் திருமணம் செய்துகொண்டேன் என்றால், ஆமாம். நல்ல சொத்துபத்துடன் விவசாய நிலம் உள்ளவர் என்றால், ஆமாம். நான் வேதியன்குடியில் பன்னீர்செல்வத்துடன் குடித்தனம் நடத்தவில்லை என்றால், சரியல்ல. என்னுடன் சேர்த்து எனது பெற்றோருக்கு ஐந்து பெண்குழந்தைகள் என்றால், ஆமாம். சகோதரர்கள் மூன்று நபர்கள் என்றால், ஆமாம். எனது சகோதரர்களில் இரண்டு நபர்கள் மீது வழக்குகொடுத்துள்ளேன் என்றால், இல்லை. மூன்று நபர்கள் மீதும் கொடுத்துள்ளேன். மற்ற சகோதரிகள் திருமணம் செய்துகொடுத்து தனித்தனியாக வேறு ஊர்களில் வாழ்ந்து வருகிறார்கள் எனறால், ஆமாம்.

2) செந்தில்குமாரும் நானும் நல்ல முறையில்தான் பேசிவந்தோம் என்றால், ஆமாம். நான் இருக்கின்ற வீட்டின் மனையானது செந்தில்குமார் எனக்கு அளித்தது என்றால், இல்லை. மேற்படி மனையானது செந்தில்குமார் பெயரில் உள்ளது என்றால், ஆமாம். எனது மகள் திருமணத்திற்கு செந்தில்குமார் வந்தார் என்றால், ஆமாம். அவர்தான் தாய்மாமா முறை என்றால், ஆமாம். பிரட்சனை நடந்தபோது எனது அம்மா மாரியம்மாள் செந்தில்குமார் வீட்டில்தான் இருந்தார் என்றால், ஆமாம். நான் அடிக்கடி மாரியம்மாளிடம் பணம் வாங்கிக்கொண்டிருந்தேன் என்றால், சரியல்ல. சொத்து கேட்டும் பணம் கேட்டும் அடிக்கடி தகராறு செய்து வந்தோம் என்றால், சரியல்ல. எனக்கும் எனது அம்மாவிற்கும் பணம் கொடுக்கல் வாங்கல் பேச்சுவார்தை நடந்தபோது செந்தில்குமார் எதார்தமாகத்தான் அங்கு வந்தார் என்றால், இல்லை. என்னை போன்றே எனது மகளும் என்னுடன் எனது வீட்டில் இருக்கவேண்டும் என்பதாலும் பணம் சொத்து கேட்பதற்காக எனது மகளினை என்னுடன் வைத்துக்கொட்டேன் என்றால், சரியல்ல.

3) நானும் எனது மகளும் சொத்து கேட்டு எனது அம்மாவினை அடித்து அவர் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார் என்றால், சரியல்ல. சம்பவம் நடந்திருந்தால் எனது அம்மாவினை போலிசார் சாட்சியாக சேர்த்திருப்பார்கள் என்றால், சரியல்ல. சம்பவம் நடைபெறவில்லை என்பதால்தான் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால், சரியல்ல. எனது விருப்பத்திற்கு திருமணம் செய்து வாழ்ந்ததால் எனது பெற்றோர் என்னை சேர்த்துக்கொள்ளவில்லை என்றாலும் நான்தான் பிரட்சனை செய்துவந்தேன் என்றால், சரியல்ல. எதிரிகளிடம் இருந்து சொத்தினை பெறவேண்டும் என்பதற்காகவும் அவர்கள் மீது பொய்யாக புகார் அளித்து சிறைக்கு அனுப்பவேண்டும் என்ற கெட்ட எண்ணத்துடன் நான் எனது மகள், மருமகன் சிகிச்சைக்கு சேர்ந்தோம் என்றால், சரியல்ல. எனது சகோதரர்கள் என்னை நல்லமுறையில் பார்த்து வந்தார்கள் என்றாலும், எனது மருமகன் வந்த பின்புதான் சொத்து பிரட்சனை ஏற்பட்டது என்றால், சரியல்ல.

4) நான்தான் எனது மருமகனை சொத்திற்காக எனது வீட்டில் வைத்து பிரட்சனை செய்து வருகிறேன் என்றால், சரியல்ல. பொதுவாக பெண்னை திருமணம் செய்து கொடுத்ததால் கணவர் வீட்டில் வாழ்வார்கள் என்றால், ஆமாம். என்னை போன்றே எனது மகளையும் எனது வீட்டில் வைத்துள்ளேன் என்றால், வேறுயாரும் இல்லை. காயங்கள் ஏதும் ஏற்படவில்லை என்றாலும் திட்டம்போட்டு ஏற்படாத காயத்தினை ஏற்பட்டதாக பொய்யாக கூறுகிறோம் என்றால், சரியல்ல. எனது முதல் விசாரணையில் திருமணத்திற்கு பின்புதான் பணம் கொடுக்கல் வாங்கல் சொத்து பிரட்சனை ஏற்பட்டதாக கூறியுள்ளேன் என்றால், இல்லை. சகோதார்கள் நல்லமுறையில் இருப்பதால் அவர்களிடம் இருந்து பணம், நகை பெறவேண்டும் என்பதற்காக பொய்யாக சட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால், சரியல்ல.

மறுவிசாரணை
இல்லை